★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 23உ. செவ்வாய் (7—8—56) ★ ★ வெளியூர்: ஆடி 24உ. புதன் (8—8—56) [இதழ் 49

பாலாறு நீர்த் தகராறு: மாநிலங்களுக்கு டில்லி உத்தரவு

மைசூருக்கும் சென்னைக்குமிடையே பாலாறு நீரை உபயோகித்துக்கொள்ளுவது பற்றிய தகராறு குறித்து மீண்டும் மக்கள் சபையில் கேள்வி எழுந்திருக்கிறது.

மத்திய சர்க்கார் பிரதிநிதி ஒருவர் முன்னிலையில், இரு மாநிலங்களின் பிரதம எஞ்சினீயர்கள் கூடிப் பேசியபோது மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின்படி நடந்துகொள்ளுமாறு சம்பந்தப்பட்ட இரு மாநிலங்களும் கேட்கப்பட்டிருப்பதாக டில்லி மந்திரி ஹாதி என்பார் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

(4-ம் பக்கம் பார்க்க)

'ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!'

'உதய சூரியன்' சின்னம் கேட்டுப்பெறவேண்டுகோள்

'தேர்தல் வெற்றியால் நாம் எதிர்பார்க்கும் பலன் என்ன?'

'ஜோரேஸ் வரலாறு' புகட்டும் பாடம்

தோழர்களிடம் திட்டம் கேட்கிருர் அண்ணு

"தேர்தலுக்காக நாம் சேகரிக்க எண்ணியிருப்பதெல்லாம் சில இலட்ச ரூபாய்கள்தான்.

"நமது கழகத்தில் உள்ள எழுத்தாளர் பலரும் கதைகளோ அல்லது கட்டுரைகளோ எழுதித் தருவார்கள்; ஒவ்வொருவருடைய எழுத்தும் புத்தகமாக வெளியிடப்படும். இந்த வெளியீட்டிற்காகக் கிடைக்கும் தொகை, கழகத்தின் தேர்தல் நிதியில் சேரும்.

"நமது கழகத் தோழர்களில் சினிமாவிற்குக் கதை எழுதுவோர் இருக்கின்றனர்; அப்படி எழுதுகிற ஒவ்வொருவரும், ஒரு சினிமாவில் தங்களுக்குக் கிடைக்கிற தொகையை தேர்தல் நிதிக்குத் தருவார்கள்.

"அதேபோல, நமது கழகத்தில் சிறந்த நடிகர்கள் இருக்கின்றனர்; எம். ஜி. இராமச்சந்திரன், கே. ஆர். இராமசாமி, டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். இராசேந்திரன் போன்ருர் தாங்கள் நடித்துக்கொண்டிருக்கும் படங்கள் ஒன்றில் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய பணத்தைத் தேர்தல் நிதிக்கெனத் தருவார்கள்.

"இவை எல்லாம் எனது ஆசைகள் அல்ல; செய்துமுடிக்கப்பட்ட ஏற்பாடுகள். (நீண்ட கைதட்டல்),"

—இவ்வாறு அண்ணு அவர்கள், 5—8—56-ல் சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற மாணவர் நிதியளிப்பு விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்ஞர்:—

"இந்த ஏற்பாடுகளுக்கும் இதரவற்றிற்கும் தோழர்களுடைய ஒத்துழைப்பு மிகத் தேவை; புத்தகம் வெளியிடுவது என்ருல் சுலபமானதல்ல; வெளியிடும் புத்தகங்கள் விற்பனையாகாது தேங்கினுல் அது கோரிய பலனைத் தராது; எனவே, தோழர்கள் தங்களின் முழு ஒத்துழைப்பையும் நல்கவேண்டும்.

"நமக்குக் கிடைக்கக்கூடிய வசதிகளை நாம் சரிவரப் பயன்படுத்திக்கொண்டால் அதுவே போதுமானதாகும்.

"தேர்தல் காலத்தில், நமது கழகச் சொற்பொழிவாளர்களை தொடர்புடைய தொகுதிகளிலிருப்போர் அழைத்துக் கூட்டங்கள் நடத்துவதில் உள்ள சிரமங்களைக் குறைக்கவும் தலைமை நிலையம் ஏற்பாடு செய்யும்.

"தொகுதிகளில் உள்ள கழகத் தோழர்கள் தலைமை நிலையத்தோடு தொடர்புகொண்டால், தலைமை நிலையமே தனது செலவில் கூட்டங்களுக்குச் சொற்பொழிவாளர்களை அனுப்பித் தரும். பொதுச்செயலாளர், தலைமை நிலையத்திலிருந்துகொண்டு காரியங்களைக் கவனித்து வருவார். நமது பிரச்சாரம் நடைபெற்றுவரும் நேரத்தில், காங்கிரசார் வந்து ஏதேனும் நம்மைப் பற்றி தாறுமாருகப் பேசிவிட்டுச் சென்ருல், அப்போது மட்டும் பொதுச் செயலாளர் அந்தக் குறிப்பிட்ட ஊருக்குச் சென்று கழக நிலைகளைத் தெளிவாக்கிவிட்டு வருவார். இப்படி நாம் நமது சக்திகளைத் திரட்டி ஒரு ஒழுங்கு முறையோடு பண்பு குறையாமல் பயன்படுத்திக் கொள்வோமேயாஞல், வெகு சிறப்பாக நாம் தேர்தல் வேலைகளைச் செய்ய முடியும்.

"நமது வேலைகளைச் செய்ய நமக்கொன்றும் அதிகமான பணம் தேவை இல்லை.

"நான் செய்ய உத்தேசித்திருக்கும் வேலை என்ன என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாயிருக்கலாம்.

"என்னிடம் ஒரு லாரி—சாமான் தட்டுமுட்டுகள் ஏற்றிக்கொள்வதற்காக! ஒரு 'வான்—சுமார் 20 பேர் 'மனம் உண்டானுல் இடம் உண்டு' என்ற வகையில் பிரயாணம் செய்ய! சென்னையிலிருந்து நானும் என்னோடு 20 வாலிபத் தோழர்களும் தேவையான சாமான்களுடன் புறப்பட்டு சைதாப்பேட்டையை அடைவோம்; ஒரு நாள் அங்கு காலை முதல் இரவுவரை பிரச்சார வேலைகள் நடபெறும். ஊரில் ஒரு மரத்தடியில், நாங்கள் கொண்டு செல்லும் படங்களை எல்லாம் விரித்து வைத்துக்கொண்டு மக்களைக் கூட்டிவைத்து விளக்கம் கூறுவோம்; அந்தப்படங்கள், நாட்டின் நிலையை நாட்டு மக்களுக்கு விளக்குவனவாக இருக்கும்.

"பின்னர், மாலையில் நான்கைந்து தோழர்கள் பேசுவார்கள்; இரவு, தோழர்கள் பலருடன் நானும் சில காட்சிகளை நடிப்பேன்; இப்படி சென்னையிலிருந்து தூத்துக்குடிவரையில், மூன்று மாத காலம் சுற்றி வந்தால், நாம் எழுப்புகிற பிரச்சாரச் சூறுவளியை எதிரிகள் எப்படிச் சமாளிக்கமுடியும்?

"நான்கைந்து நாட்களுக்கு பண்டித நேருவைக் கூட்டிவந்து, பத்துப் பதினைந்து இடங்களில் அவரைக் கூட்டிவந்தால்தான், 'சமாளித்துவிட்டிருப்போம்' என்ற திருப்தியே—காங்கிரசாருக்கு ஏற்படமுடியும்.

"நாம் செய்கிற பிரச்சார வேலைகளுக்கு நமக்கொன்றும் அதிகம் செலவிருக்காது; ஆனுல், அவர்களுக்குச் செலவாகும் தொகையோ ஏராளமானதாக இருக்கும்.

"நாம் தேர்தலில் ஈடுபடும்போது மக்களுக்கு என்னென்ன செய்யவேண்டும் — என்னென்ன நம்மால் செய்ய முடியும் என்பதை எல்லாம் நாம் எடுத்துக் கூறியாக வேண்டும்.

"மாணவத் தோழர்கள் தங்கள் பணி என்ன என்று கேட்டார்கள்—தோழர்கள் பலரும் கேட்கின்றனர்.

"மாணவத் தோழர்களும் இதர தோழர்களும், நாட்டு மக்களுக்கு என்ன என்ன தேவை என்பதை—அவர்கள் படித்தவர்கள் ஆதலால்—எண்ணிப் பார்த்து ஆராய்ந்து, தலைமைக் கழகத்திற்கு அறிவிக்கவேண்டும். பல முற்போக்குக் கட்சிகளுடையவும தேர்தல் திட்டங்களை எல்லாம் தோழர்கள் அலசிப்பார்த்து, கழகம், இந்த நாட்டுக்கு உகந்த வகையில் எத்தகையதோர் தேர்தல் திட்டத்தை வைக்கவேண்டும் என்பதையும் எடுத்துரைக்க வேண்

(4-ம் பக்கம் பார்க்க)

பஞ்சாப் காங்கிரஸ் 'கோஷ்டி'ச் சண்டை

'ஆமாம்' போடாதவர்மீது தலைவர் நடவடிக்கை எடுக்கிருராம்

புதுடில்லி, ஆக. 5—

பஞ்சாப் பிரதேச காங்கிரஸ் தலைவர் கியானி குருமுக் சிங் முசாபீர், பஞ்சாபின் முன்னுள் கல்வி போக்குவரத்துத் துறை அமைச்சரான ஜெகத் நாராயணன்மீது எழுப்பிய குற்றச் சாட்டுக்களுக்கு, ஜெகத்நாராயணன் தந்திருக்கும் பதில்கள், காங்கிரஸ் நிறுவனம் எவ்வளவு கலகலத்துப்போயிருக்கிறது என்பதை அளவிடத் துணைபுரிவதாகும்.

'பத்திரிகை ஒன்றில் ஜெகத்நாராயணன் எழுதிய சில கட்டுரைகள் மகாபஞ்சாப்சமிதியின்கிளர்ச்சிகளுக்கு உரமூட்டுவனவாக அமைந்தன' என்ற பிரதான குற்றச்சாட்டிற்குப் பதிலளிக்கையில் நாராயணன், 'இதில் உண்மை துளியும் இல்லை' என்று குறிப்பிட்டுவிட்டு, மேலும் கூறியிருக்கிருர்:—

"மக்களில் பெரும் பகுதியினருடையவும் காங்கிரசாருடையவும் உண்மையான மன நிலையை, காங்கிரஸ் மேலிடம் இன்று புரிந்துகொண்டிருக்கவில்லை; ஆனுல் அதிர்ஷ்டவசமாக மாநிலத்தின் உண்மையான நிலை மேலிடத்திற்குத் தெரியவருகிறது.

"பிரதேச காங்கிரஸ் தலைவரான நீங்கள் மேலிடத்திற்குக் காட்டிய தவருன உருவத்தையும் மேலிடம் கண்ணுற்றுக்கொண்டது. உங்களுடைய கருத்துக்கு ஒத்துழைத்தவில்லை என்ற ஒரே காரணத்திற்காக உங்கள் மதிப்பிற்குரிய பல தோழர்கள்மீது நீங்கள் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்; எனவே, நானும் உங்களிடமிருந்து நியாயம் கிடைக்கும் என எதிர்பார்க்கவில்லை.

"மகாபஞ்சாப் விவகாரம் சம்பந்தமாக ஒரு எழுத்தாளன் — காங்கிரஸ்காரன் — குடிமகன் என்ற முறையில் கருத்தறிவிக்க எனக்கு உரிமை இருப்பதாகவே நான் கருதுகிறேன்."

சேலத்திலும் ஒரு அலுமினியத் தொழிற்சாலையாம்!

சேலம், ஆக. 7—

"இந்தியாவில் இரு அலுமினியத் தொழிற்சாலைகளை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது; ஒன்று பீகாரிலும, மற்ருென்று சேலத்திலும் அமையும்,"

என்று, மத்திய திட்ட இலாகா துணை அமைச்சர் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

சேலம் தொழிற்சாலையை நிர்மாணிக்க ரூ. 10 கோடி செலவழிக்கப்படுமெனறும், பீகார் தொழிற்சாலையை விட இது விரைவில் நிர்மாணிக்கப்பட்டு விடுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

3-இலட்சம் அம்பர் இராட்டை

உற்பத்தி செய்ய வடநாட்டில் திட்டம்

ஜெய்ப்பூர், ஆக. 6—

இராஜஸ்தான் கதர்போர்டு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சுமார் 3-இலட்சம் 'அம்பர் சர்க்கா'க்களை உற்பத்தி செய்வதற்கான திட்டம் தீட்டியிருக்கிறது என்றும், மாநிலத்தில் உள்ள 25 மாவட்டங்களில், ஒவ்வொன்றிலும் இதற்காக ஒரு பயிற்சி முகாம் அமைக்கவும் உத்தேசித்திருப்பதாயும் தெரியவருகிறது.

ம. பி. மாநிலத்தில் 5,000 ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

நாகபுரி, ஆக. 5—

வேலைப் பளு பற்றி எழுந்த தகராறு, ஒரு பெரும் நெசவாலையின் 5,000 தொழிலாளர்களையும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுத்தியிருக்கிறது.

'மாடல் ஆலை' என்ற அந்த நெசவாலையின் ஒரு பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்களின் வேலைப்பளு குறித்த சர்க்கார் அதிகாரியின் மதிப்பீடு தவருனதென்பதால், அதனை எதிர்த்து தொழிலாளர் அனைவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனராம்.

பிப்ரவரி 20—அர்த்தால் எதிரொலி

கோம்பை, பண்ணைபுரம், தேவாரம் தோழர்கள் மீது வழக்கு

20—2—56ல் நடைபெற்ற அர்த்தாலின்போது கைது செய்யப்பட்ட 64 சர்வகட்சித் தோழர்களையும் பாளையம் சப்-மாஜிஸ்திரேட் 15 நாள் 'ரிமாண்ட்'டில் வைத்து, மதுரை மத்திய சிறைக்கு அனுப்பினுர். விடுதலை பெற்று வந்த பின் மீண்டும் போலீசாரால் சம்மன் செய்யப்பட்டு 1—8—56-ல் வாய்தாவுக்குச் சென்றனர்.

விசாரிக்காமலே 14-8-56-ந் தேதிக்கு வாய்தா போடப்பட்டிருக்கிறது. கைதான தோழர்களில் 36 பேர் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள்.

(ந-நி.)

தென்னாடு

சென்னை 7-8-'56 செவ்வாய்

தமிழர்கள் தலைகுனியட்டும்!

ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் மற்றொரு நாடு தலையிடக் கூடாது என்பது மிகச் சிறந்ததோர் உலகப் பொதுவிதியாக ஏற்றுக்கொள்ளப்படுவதில் தவறேதுமில்லை. ஆனால், இந்தப் பொதுவிதியை விளக்குகிற ஒவ்வொரு சொல்லுக்கும் நேர்மையான நியாய உள்ளம் கொண்டோர் ஒப்பக் கூடிய தெளிவான பொருள் வரையறுக்கப்பட்டாலன்றி இந்தப் பொதுவிதி, எண்ணற்றக் கொடுமைகளுக்குப் பாதுகாப்பளிக்கக் கூடியதாயும், கோடிக் கணக்கான மக்களின் ஜீவாதாரமான உரிமைகளுக்கு உலை வைக்க உதவக்கூடியதாயும் ஆகிவிடும் என்பதையும் மறந்துவிடுவதற்கில்லை.

'சிங்களத்தை மட்டுமே ஆட்சிமொழி ஆக்குவோம்; தமிழ் மொழிக்குச் சிங்களத்துடன் சமநிலை அளிக்கமாட்டோம்' என்று வெறிகொண்டு கூவுகிற சிங்கள சர்க்கார், 'தமிழ் மொழிக்கு இலங்கையில் சமநிலை தரவேண்டுமென்ற இலங்கைத் தமிழரின் கோரிக்கைக்கு இந்திய சர்க்காரோ, சென்னை சர்க்காரோ ஆதரவு தருமானல், உறவு முறியும்—பகை உணர்வு புகைவிடும்' என்று அச்சுறுத்திற்று.

டில்லி வாழ் பெரிய மனிதர்கள், இந்த அச்சுறுத்தலைக் காரணமாகக் காட்டி, இயற்கையாகவே தென்னாட்டவர்—தமிழர்தம் நலனில் தங்களுக்குள்ள விசேடமான அக்கரையின்மையை மூடி மறைத்துக் கொண்டிருக்கின்றனர்.

'இந்தியா' என்ற அரசியலமைப்பிற்குள் அடங்கிக் கிடக்கிற தென்னாட்டவரின் நலன்களைப் பேணுவதற்கு எண்ணம் கொள்ளாத வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், இந்தியாவிற்கு வெளியே—இலங்கையில் வாழும் தமிழர்தம் நலன்குறித்து அக்கரை கொள்ளுவர் என்று எதிர்பார்ப்பதே, அரசியல் அறிவீனமாகும்.

பண்டாரநாயகாவின் அச்சுறுத்தலுக்குப் பதில் தரும் வகையில், சென்னை சர்க்கார், இலங்கைத் தமிழருக்கும் தங்களுக்கும் உள்ள இரத்தத் தொடர்பை மறந்து--பாசத்தை அறுத்துவிட்டு,'வாய்திறவோம்; பேசமாட்டோம்' எனக் கூறிவிட்டனர் என்ற செய்தி உண்மையானதுதான் என்றால், தமிழர்கள் மீண்டும் ஓர்முறை, தாங்கள் பெற்றிருக்கும் மானமிழந்த ஆட்சிக்காக வெட்கித் தலைகுனியத்தான் வேண்டும்.

இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்படும் அநீதி குறித்து இலங்கை சர்க்காருடன் நேரடியாகப் பேச முடியாதவாறு அடிமைத்தளை, சென்னை சர்க்காரின் கைகளைப் பிணைத்திருப்பது உண்மைதான் என்றாலும், இவர்கள் அடிமைப்பட்டுக் கிடக்கும் டில்லியிடம் இந்த அநீதி குறித்து முறையிட்டுக் கொள்வதை எதுவும் தடுத்துவிட முடியாதே! அந்த முறையிட்டு கோரிய பலனைப் பெறுகிறதோ இல்லையோ, 'இலங்கைத் தமிழரோடு சொந்தம் கொண்ட எமக்கு, அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி சஞ்சலம் தருகிறது' என்று கூறிடுவதின் மூலம் சென்னை மந்திரிகள், தாங்கள் தோன்றிய தமிழ்க் குலத்திற்கு மேலும் களங்கம் தேடாமலாவது இருக்க முடியுமே! இதைச் செய்வதை எது தடுத்தது? தடுத்தது ஏது?

இலங்கைவாழ் சிறுபான்மையினரான தமிழருக்கு பெரும்பான்மையினரால் இழைக்கப்படும் கொடூரமான அநீதியை, உலக அரங்கில் 'அந்தஸ்தான'தோர் இடம் பெற்றிருக்கிறது என்று பெருமைக்குரியதாக்கப்படும் இந்தியாவே தட்டிக் கேட்க முடியாது என்றால்—கேட்கவேண்டிய பொறுப்புடைய இந்தியாவே கேட்கமுடியாது என்றால், 'உலகமும்தான் கேட்க முடியாது' என்ற வாதம் முளைக்குமே! உலகம் இதை ஏற்றுக்கொள்ளுமா?

'உள்நாட்டு விவகாரத்தில் பிறர் தலையிடக்கூடாது' என்ற விளக்கம் கூறப்படாத பொதுவிதி, உலகத்தையும் கட்டுப்படுத்திவிட்டால், ஒரு நாட்டுக்குள் நடைபெறும் மிகக் கொடிய மனித நாகரீகத்திற்குப் புறம்பான அக்கிரமங்களைக் கண்டிப்பதற்கு எவருக்குத்தான் உரிமை இருக்க முடியும்?

உள்நாட்டு விவகாரம் என்னும்போது, உள்நாடு என்பதற்கே தெளிவான விளக்கம் கிடைக்கவில்லையே!

அல்ஜீரியா, பிரான்சின் ஒரு பகுதி — பிரிக்க முடியாத பகுதி; அங்கே எழுந்துள்ள சிக்கல் குறித்து எவரும், 'என்ன, ஏன்?'—என்று கேட்கக்கூடாதென்கின்றனர், பிரெஞ்சி ஏகாதிபத்தியவாதிகள்!

கோவா — போர்ச்சுகலின் ஒரு மாகாணம்; அதைத் தங்களுடையது எனக்கோர எவருக்குமே உரிமை இல்லை என்று பேசுகிறான், ஏகாதிபத்திய வெறியன் சலாசர்!

'உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக் கூடாது, எனப் 'பஞ்சசீலம்' போதிப்போர், உள்நாடு எது என்ற விளக்கம் தரப்படாதவரையில், இந்தப் பிரெஞ்சு, போர்ச்சுகீசிய ஏகாதிபத்திய வாதங்களை எப்படி ஏற்றுக்கொள்வரோ?

'வெள்ளையரோடு, வெள்ளையரல்லாதார் உலவ அனுமதிக்கமாட்டோம்' என்று, தென்னாப்பிரிக்காவில் நிறவெறியால் கோரத்தாண்டவமாடுகிறார்களே, வெள்ளையர்கள்? இந்தக் காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கைகளையும், 'உள்நாட்டு விவகாரம்' என்று கூறிவிட்டு ஒதுங்கி நின்றுகொள்ள வேண்டுமா, உலகம்! ஒதுங்கி நிற்கிறதா நிகழ்காலத்தில்? இல்லையே!

பின், இலங்கையில் சுமார் 20 இலட்சம் மக்களின் உரிமைகளை 50 இலட்சம் மக்கள் பகிரங்கமாக பிடுங்கிக்கொள்ளுகிற அநியாயத்தை மட்டும் எப்படி 'உள்நாட்டு விவகாரம்' என்று கூறி ஒதுங்கி நின்றுகொள்ள டில்லி ஒப்பிற்று?

தென்னாப்பிரிக்க நிறவெறியைக் கண்டிக்கும் டில்லி, இலங்கை அநீதியைக் கண்டிக்க மறுத்தது ஏன்?

'பஞ்சசீலம்' பேசும் அந்தப் 'பெரிய மனிதர்'கள், அவர்களுடைய இந்த முரண்பட்ட—வஞ்சகமான செயல்களுக்கு 'உந்து சக்தி' எது — உள் நோக்கம் என்ன என்பதை தென்னாட்டவர் புரிந்துகொள்ளமாட்டார்கள் என்று கருதி ஏமாற்றத்தைச் சுவைப்பதில், நமக்கு மகிழ்ச்சியே!

என்ன தாராளம்!

சென்னைக்கு மத்திய சர்க்கார் தரும் உதவி

புதுடில்லி, ஆக. 6—

சென்னை மாநிலத்தில் அதிக உணவு உற்பத்தித் திட்டங்களுக்காக, குறுகிய காலத் தவணை கடனாக மத்திய சர்க்கார் சுமார் ரூ 3-கோடி அனுமதித்துள்ளனர்.

அம்மோனியம் சல்பேட் உரவிநியோகத்திற்காக மாநில சர்க்காருக்கு ரூ. 2,95,31,250 கடனாகத் தர ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

உணவுப் பெருக்குத் திட்டம் சம்பந்தமான பல திட்டங்களுக்காக நீண்ட தவணை கடனாக சுமார் ரூ. 32¾ இலட்சம் சென்னைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

வாடகை அடிப்படையில் இயந்திரக் கலப்பைகள் வாங்குதல், வடிமுனைக் கிணறுகள் வெட்டுதல் சம்பந்தமான 12 திட்டங்களுக்கு ரூ 5,29,051 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

'25-ந் தேதிக்குள் முடிவு கூறுக'

சர்க்காருக்கு ஊழியர்கள் கோரிக்கை

சென்னை, ஆக. 5—

"தங்களுக்குத் தரப்படும் கிராக்கிப்படி உயர்த்தப்பட வேண்டும் என்ற தங்கள் கோரிக்கை குறித்து சர்க்கார், வரும் ஆக. 25-ந்தேதிக்குள் முடிவு தெரிவிக்கவேண்டும்" என்று, இங்கு இன்று காலை கூடிய சர்க்கார் ஊழியர் சங்க செயற்குழு முடிவெடுத்திருக்கிறது.

சங்கத் தலைவர், மந்திரியின் விருப்பத்திற்கொப்ப அவரை வரும் ஆக. 19-ந்தேதி சந்திப்பது எனவும்; அப்போது சர்க்கார் முடிவு 25-ந் தேதிக்குள் அறிவிக்கப்பட வேண்டுமெனக் கோருவதெனவும் தலைவர் கண்ணன் குட்டிமேனன் கூறியிருக்கிறார்.

ஆப்பிரிக்காவில் இந்தியர்களை அடியோடு ஒழிக்க முயற்சி?

வெள்ளையரின் நிறவெறித் தாண்டவம் உச்ச நிலையை எட்டுகிறது

ஜோகனஸ்பர்க், ஆக. 5—

ஜோகனஸ்பர்க் மாகாணத்தின் மேற்கு மாவட்டங்களில் வசிக்கும் ஆயிரக்கணக்கான இந்தியர்கள், வெள்ளையரின் நிறவெறிக்கு இடமளிக்கும் வகையில், இப்போது வசிக்கும் இடங்களிலிருந்து துரத்தப்பட்டு, இன ஒதுக்கல் சட்டப்படி வேறு இடங்களில் குடியேற்றப்படுவர் என்று தெரியவருகிறது.

இந்த நிறவெறிச் செயலுக்கான உத்தரவு, சர்க்கார் கெஜட்டில் பிரசுரமாகியிருக்கிறதாம்.

சிலர் ஓராண்டுக்குள்ளும், சிலர் இரண்டாண்டுகளுக்குள்ளும் தாங்கள் வசிக்கும் இடத்திலிருந்து வெளியேறிவிட வேண்டுமென உத்தரவிடப்பட்டிருக்கின்றனராம். சில இந்தியர்களுக்குக் கிடைத்துள்ள கட்டளையில் அவர்கள் வசிக்கும் இடங்களை முழுவதுமாக வெள்ளையர் ஆக்கிரமித்துக்கொள்ள விருப்பதால் உடனே இந்தியர்கள் அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறதாம்.

இந்த நிறவெறித் தாண்டவத்திற்கு, இந்தியர்கள் மட்டுமின்றி பல்லாயிரக் கணக்கான ஆப்பிரிக்கர்கள், சீனர்கள் முதலியோரும் பலியாவர் என்றும் தெரியவருகிறது.

டிரான்ஸ்வால் இந்திய காங்கிரசைச் சேர்ந்த ஒருவர், 'இந்த உத்தரவு, ஆப்பிரிக்காவில் இந்தியர்களை அடியோடு ஒழிக்கும் உத்தரவாகும்' என்று கூறியிருக்கிறாராம்.

உபகார சம்பளம் தரப்படுமாம்!

விஞ்ஞானம், தொழில் நுணுக்க ஆராய்ச்சிக்காகவாம்!

புதுடில்லி, ஆக 6—

விஞ்ஞானம், தொழில் நுணுக்கம் இவற்றில் ஆராய்ச்சி நடத்த 20 பேர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்க மத்திய கல்வி இலாகா மனுக்கள் பெற்றுக்கொள்ளும்.

ஒவ்வொரு உபகாரச் சம்பளத்தின் மதிப்பு மாதமொன்றுக்கு ரூ. 400-ஆக இருக்கும்; ஆராய்ச்சி நடத்த விசேட சாதனம் தேவைப்பட்டால் ரூ 1,000 மானியமும் தரப்படும்.

இந்த உபகாரச் சம்பளம் 3 ஆண்டுகளுக்கு அளிக்கப்படும்; விசேட சந்தர்ப்பங்களில் இது 5 ஆண்டுகளுக்கு பரவலாக்கப்படும்.

அதிலென்ன குறைச்சல்?

புதுடில்லி, ஆக. 6—

சர்க்கார் தஸ்தாவேசுகளிலும் கல்வி நிறுவனங்களிலும் சாதிப் பெயர்கள் குறிப்பிடப்படுவதைத் தவிர்ப்பதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென காங்கிரஸ் காரியக் கமிட்டி கருத்தறிவித்ததாம்.

'விடுதலை விரும்பி' ஷேக் அப்துல்லா

சிறைவாசம் நீடிக்கிறது

புதுடில்லி, ஆக. 6—

காஷ்மீர் முன்னாள் பிரதமர் ஷேக் அப்துல்லாவின் சிறைவாழ்வு இன்னும் ஆறு மாத காலத்திற்கு நீடிக்கும் என்று, காஷ்மீர் சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறதாம்.

வரும் ஆகஸ்டு 9-ந் தேதியோடு ஷேக் அப்துல்லாவின் சிறைவாசம் மூன்றாண்டுகளைத் தாண்டுகிறது.

முதுகிழவர் - முசாதிக்

மூன்று ஆண்டு சிறைவாசத்திற்குப் பின்னர் விடுதலை

தெஹ்ரான், ஆக 5—

மூன்றாண்டுகள் தன்னந்தனியாகச் சிறை வைக்கப்பட்டிருந்த முதுகிழவர் முசாதிக் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

ஆங்கிலோ - ஈரானிய எண்ணெய்க் கம்பெனிகளை, இந்த முதுகிழவர் முசாதிக், சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் தேசியமயமாக்கி, உலகில் ஒரு பெரும் உருவமாகத் திகழ்ந்தார்.

பின்னர், 'ஈரானில் முடியாட்சியை ஒழிப்பதற்காகச் சதித் திட்டத்தில் இறங்கினார்' எனக் குற்றம் சாட்டப்பட்டு, கடந்த 1953 டிசம்பர் 31-ந் தேதியன்று, மூன்றாண்டுகளுக்குச் சிறையிருக்க வேண்டுமென இராணுவ நீதிமன்றம் ஒன்றால் உத்தரவிடப்பட்டார்.

விடுதலை பெற்றுள்ள முசாதிக், இப்போது, தனது சொந்த கிராமத்தில் மனைவி, பிள்ளைகளுடன் ஓய்வு பெறுகிறார் என்றும், தனது முன்னாள் நண்பர்கள் எவரையும் சந்திப்பதில்லையென அவர் இராணுவத்தினருக்கு உறுதி கூறியிருப்பதாயும் கூறப்படுகிறது.

எஸ்.எஸ்.எல்.சி.தேர்வு

அதிக மார்க்குகள்வாங்கும் அரிசன மாணவருக்குப் பதக்கம்

சென்னை, ஆக. 6—

சர்க்கார் தற்போது தயாரித்து வரும் ஒரு திட்டத்தின்படி, நடப்பு கல்வி ஆண்டு முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் எஸ். எஸ். எல். சி. தேர்வில் அதிகம் மார்க்குகள் வாங்கும் இரு அரிசன மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் பரிசு ரூ. 50 மதிப்புள்ள ஒரு தங்கப் பதக்கம்; 2-வது பரிசு ரூ. 10 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கம்.

தற்கொலை மனப்பான்மை

ஆண்களுக்கே அதிகமாம்!

தற்கொலை செய்துகொள்ளும் மனப்பான்மை, உலகில், பெண்களைவிட ஆண்களுக்கே அதிகமென்று உலக சுகாதார நிறுவனம் ஆராய்ந்து அறிந்துள்ளது.

நாற்பது கோடி பேர்கள் கொண்ட 25 நாடுகளில் ஆண்டுதோறும் சுமார் 71,000 பேர் தற்கொலை செய்துகொள்ளுகின்றனராம்!

பல்கலைக் கழக புதிய வகுப்பு

தியாகராயர் கல்லூரித் தலைவர் விளக்கம்

சென்னை, ஆக. 4—

"முற்போக்குக் கல்வியின் எல்லா அம்சங்களையும் நன்ருகச் சீர்தூக்கிப் பார்த்த பின்னரே சென்னைப் பல்கலைக் கழகம், 'பல்கலைக் கழகத் துவக்க வகுப்பு'க்களை (ப்ரீ யுனிவர்சிடி கோர்ஸ்) புகுத்தியிருக்கிறது,"

என்று, சென்னை — வண்ணை தியாகராயா கல்லூரித் தலைவர் திரு. எம். சண்முகம் அவர்கள் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

"கடந்த 1882-ம் ஆண்டிலேயே 'ஹண்டர்' குழு, பள்ளிகளில் போதனு முறைகளில் மாற்றம் வேண்டுமென்றும், சர்க்கார்களின் உதவியுடன்கூடிய தனிப்பட்டோர் நிறுவனங்களிடம் கல்வியானது ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் கூறினது. அக்குழுவைப் பின்பற்றி மேலும் பல குழுக்கள், கல்வி முறையில் மாற்றம் தேவை என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளன. துரதிருஷ்டவசமாக, பல காலங்களில், பற்பல குழுக்களாலும் கமிட்டிகளாலும் செய்யப்பட்ட கல்வித் துறை சிபாரிசுகள் எதுவுமே கவனிக்கப்படாமல் விட்டுவிடப்பட்டுவிட்டன.

"1902-ல் நியமிக்கப்பட்ட பல்கலைக் கழகக் குழு, சாட்லர் குழு, இராதாகிருஷ்ணன் குழு, ஏ. எல். முதலியார் குழு ஆகியவை அவ்வப்போது செய்த சிபாரிசுகள் எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

‘மணம் கமழும் கன்னித் தமிழுக்கு இன்னல்’

‘கதம்ப மொழியாம் இந்திக்கு ஏற்றம்’

‘இந்தக் கொடுமையைச் சகித்துக் கொள்ளத்தான் வேண்டுமா?’

கருமுத்து-தியாகராசன் கருத்து

நாகர்கோயில், ஆக 7—

“இலக்கியச் சுவை நிறைந்து, மணம் கமழும் கன்னித் தமிழிற்கு இப்போது இன்னல் தோன்றியிருக்கிறது. பல்வேறு மொழிகளைப் பேசும் 40 கோடி மக்களைக்கொண்ட இந்தியத் துணைக் கண்டத்திற்குப் பொது மொழி ஒன்று தேவை என்ற போர்வையில், இலக்கணம், இலக்கியம், கற்பனை, உருவகம் முதலியவற்றால் வளம் பெறாத கதம்ப மொழியாகிய இந்தியைத் தேசிய மொழி என்று கூறிக்கொண்டு நேர்மையற்ற முறையில் அதை நம்மீது திணிக்க வடநாட்டினர் சூழ்ச்சி பல புரிந்து வருவது மிகவும் வருந்தத்தக்கது. நாட்டில் வழங்கும் 14 வட்டார மொழிகளும் தேசிய மொழிகளே என்ற உண்மையை இவர்கள் இன்னும் உணரவில்லை. பல மொழி வழங்கும் நாடு ஒரு குறிப்பிட்ட மொழியைப் பொது மொழியாக்கிக் கொள்வதினால் ஒற்றுமையுற்றுவாழும் என்பது வரலாற்றில் காணாத புதுமையாகும்.

“இந்தியாவில் எல்லா வட்டார மொழிகளையும் முறையாகப் பேரரசின் மொழியாக்காவிட்டால் குழப்பமும் பிளவும் ஏற்பட்டு, நாட்டின் ஒற்றுமை குலைந்து சீரழிவது திண்ணம். இந்தியத் துணைக்கண்டத்திற்குப் பொது மொழி ஒன்று வேண்டுமாயின், உலக மொழியாகிய ஆங்கிலமே அதற்குச் சாலப் பொருத்தமுடையதாகும்,”

—என்று, திரு. கருமுத்து தியாகராசன் அவர்கள், தென் திருவாங்கூர் இந்துக் கல்லூரியில் தமிழ் முதுகலை (எம். ஏ.) வகுப்பைத் தொடங்கி வைத்துப் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னார்:—

“இன்று மலையாள நாட்டின் ஒரு பகுதியாக இருந்தபோதிலும் நாஞ்சில் நாடு தென் பாண்டி நாட்டைச் சார்ந்ததேயாகும். 300 ஆண்டுகட்கு முன்புதான் இது மலையாளத்தோடு சேர்ந்தது என்பது வரலாற்று உண்மை; சலியா உழைப்பாலும் தளரா முயற்சியாலும் நலஞ் சிறந்த இந்நாஞ்சிற் பகுதி தாயகமான தமிழ் நாட்டோடு மீண்டும் இணைவது மட்டற்ற மகிழ்ச்சியும் ஈடில்லா இன்பமும் தருவதாகும்.

“சுமார் 1,200 ஆண்டுகட்கு முன்வரை கேரள நாடு, சேர நாடு என்ற பெயர் கொண்டு செந்தமிழ் வழங்கிய பெருநாடாக விளங்கியதென்பது மறுக்கொணா வரலாற்று உண்மையாகும். மலையாளம் தமிழன்னையின் சேயேயன்றி வேறுபட்ட மொழியன்று.

“கேரள நாட்டில் காணப்படும் பழங்காலக் கல்வெட்டுக்கள் தூய தமிழில் இருப்பது இவ்வுண்மையை வலியுறுத்துகின்றது. இவ்வரலாறு அறியாத சிலர் தமிழர்—மலையாளிகள் என்ற வேற்றுமையைக் கற்பிப்பது மிகவும் வருந்தத்தக்கது.

“தமிழ்மொழிபோல் தொன்மையும் உயர்வும், தனிமையும் தன்மையும், செம்மையும் சிறப்பும் ஒருங்கே அமைந்த மொழி உலகில் வேறொன்றும் இல்லை என்று உறுதியாகத் துணிந்து கூறலாம்.

“எழுத்துக்கும் சொல்லுக்குமேயன்றி, வாழ்க்கைக்கும் இலக்கணங் கூறும் ‘ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்’தைத் தன்னகத்தே கொண்ட பெருமை நம் தமிழ் மொழிக்கு மட்டுமே உரியதாகும் இப்பெருமையும் சிறப்பும் மற்ற மொழிகளுக்கு இல்லை என்பது உலகறிந்த உண்மையாகும்.

“பத்துப் பாட்டு, எட்டுத்தொகை போன்ற இனிய இலக்கியங்கள் வேறு எம்மொழியில் இருக்கின்றன?

“முத்தமிழ் வித்தகராகிய இளங்கோ அடிகளின் சிலம்புச் செல்வத்திற்கு, அரிய ஆங்கிலக் கவி செகப்பிரியரின் உயரிய நாடகங்கள்தாம் ஒப்பாமோ?

“திருக்குறளுக்கு ஒப்பான உலகியல், உணர்வியல், அறவியல், அரசியல் நூலைத்தான் வேறு எவ்விலக்கியம் பெற்றிருக்கின்றது? மேனாட்டு அறிஞர்களான பிளேடோ, அரிஸ்டாட்டில் முதலியோர் நூல்களில் அருகிக் காணப்படும் கருத்துக்களை வள்ளுவர் திருக்குறளில் பெருகக் காணலாம்”

செய்திச் சுருள்

★

பழவேற்காடு இளைஞர் முற்போக்குக் கழகம்

29-7-56 இரவு 7-30 மணிக்குக் கழகக் கட்டிடத்தில் தோழர் டி. வி. குப்புசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்குழு உறுப்பினர் கூட்டத்தில் பழவேற்காட்டில் புதியசாலை அமைவதின் காரணமாக வேலையிழக்கும் ஆயிரக்கணக்கான படகுத் தொழிலாளர், நெசவாளர், வண்டி ஓட்டுவோர், சிறு வியாபாரிகள், மீனவர் ஆகியோருக்கு வேலைவாய்ப்புத் தரும் வகையில் அங்கு ஒரு தொழிற்சாலை அமைக்குமாறு மத்திய, மாநில சர்க்கார்களைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

‘செந்தாமரை’

கொளத்தூர் (இடைக்கழி நாடு) தி. மு. கழகத் தோழர் கோதண்டம் அவர்களின் பெண் மகவுக்கு, 26-7-56-ல் அண்ணா அவர்களால் ‘செந்தாமரை’ எனப் பெயரிடப் பட்டது.

சேவூர்—ஆரணி (வ. ஆ.) அழகிரி மன்றம்

30—7—56 இரவு $8\frac{1}{2}$ மணிக்கு அழகிரி மன்ற இரண்டாவது சொற்பயிற்சிக் கூட்டம் தோழர் வி. பரசுராமன் தலைமையில் நடைபெற்றது ‘அறியாமை’ என்பது குறித்துத் தோழர்கள் ஏ. கே. குமாரவேலன், இ. இராதகிருட்டிணன், எம். ஏ. செயராமன், எஸ். ஜி. கோபால், மு. சோமசுந்தரன், போ. இரா. செயராமன், எஸ். ஏ. கைலாசன் ஆகியோர் பேசினர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

4-8-56 இரவு 9மணியளவில், ஆரணி (பொன்னேரி வட்டம்) கடைவீதி கிருஷ்ணன் தையற் கடையில், தி. மு. கழகச் சொற்பயிற்சிக்கூட்டம் தோழர் கோ. வெற்றிவீரன் தலைமையில் நடைபெற்றது. ‘தீண்டாமை’ என்ற தலைப்பில் தோழர்கள் ம தி. தூயமணி, கிருஷ்ணன், கா. நெடுமாறன், கா. மு. உமார், பா. சு மணி ஆகியோர் பேசினர். தாழ்த்

திருவள்ளுவர் திருநாள்

★

பெங்களூர் — அக்கிப்பேட்டை

29—7—56 காலை 11 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில். தோழர் சி. என். சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம். ஜி. வேந்தன், எம் வேணுகோபால் சி. உலகநாதன், ஜி. கிருட்டிணன் வே. இளஞ்சேரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பொன்மலை :

25—7—56 முதல் 31—7—56 வரை பொன்மலை திருக்குறள் கழகச் சார்பில் பொன்மலை வள்ளலார் அருள் மணி மாடத்தில் முதல் இரு நாட்களும், எம். ஆர். சாமி பிரதாஸ் அன்பு நிலைய மாடியில் பிற 5 நாட்களும், விழா நடைபெற்றது.

அவ்விழாநாட்களில், திரு. இளங்கண்ணனார், ஆளவந்தார், கனகரத்தினம், இராம கோவிந்தராசனார், தங்கவேலு, பேராசிரியர் இரம் போலா மாஸ்கரனஸ், அரங்கசாமி, திருநாவுக்கரசு, சீனிவாசன், அரசப்பன், சம்பந்தமூர்த்தி ஆகியோர் பல தலைப்புகளில் சொற்பொழிவாற்றினர்.

தாராவி—பம்பாய்

29—7—56 இரவு $7\frac{1}{2}$ மணிக்கு, பம்பாய் — தாராவி திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்றச் சார்பில் மன்றத் தோழர் எஸ். எம். சண்முகம் தலைமையில் நடைபெற்றது தோழர் பி. எஸ். மகாராசா வள்ளுவர் படத்தைத் திறந்துவைத்துப் பேசினார். தோழர்கள் ஜோசப் ஜார்ஜ், பி. எஸ். கிருஷ்ணன், பி. எஸ் தங்கையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் முக்கியத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது

தப்பட்ட மக்கள் ஆலயத்தினுட் செல்ல இவ்வூர் தி. மு. கழகம் முன்னின்று துணைபுரிய வேண்டும் என்ற வேண்டுகோள் வைக்கப்பட்டு, விரைவில் ஆவன செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இராயபுரம் இளைஞர் மணி மன்றம்

5—8—56ல், இராயபுரம், கால் பந்து விளையாட்டு இளைஞர் மணி மன்றத்தில் நடைபெற்றக் கூட்டத்தில், சங்கத் தலைவர் திரு. பி. கே. குரியன், அவர்கள் எம். எப். ஏ.-வில் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்துப் பல உறுப்பினர்கள் பாராட்டிப் பேசினர். திரு குரியன் அவர்கள் தமக்களிக்கப்பட்ட பாராட்டுதல்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

திருமணம்

15—7—56 காலை 11 மணி அளவில், சித்தூர் மாவட்டம் மேல்பாடியில், தோழர் க சண்முகம்—தோழியர் ஆ விட்டோபாய் திருமணம், திரு. ஆ. வீரவாகு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பழகன், ம. பொ. மோகனன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பேராசிரியர்கள் பலரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்தன. மணமகன் நன்றி கூறலுடன் விழா நிறைவுற்றது. இத் திருமணத்தின் சார்பில் — ‘நம் நாடு’ இதழுக்கு ரூ. 5 நன்கொடை அளிக்கப்பட்டது. வரப் பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

வடநாட்டில் நிறுவப்படும் சர்க்கரை ஆலைக்கு!

பிரிட்டனிலிருந்து இயந்திரங்கள்

மேற்கு வங்கத்தில் ஆமத்பூரில் நிறுவப்படும் சர்க்கரை ஆலைக்குத் தேவையான இயந்திர சாதனங்களை பிரிட்டனைச் சேர்ந்த கிளாஸ்கோவிலுள்ள ஓர் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய நிச்சயித்திருக்கிறார்கள். இவற்றின் விலை மதிப்பு 8,00,000 பவுன்கள்.

கழகச் செய்திகள்

தில்லைவிளாகம் தி. மு. கழகத் துவக்கம்

1—7—56-ல் தில்லைவிளாகம் தோழர் பா அரு. பழனியப்பா இல்லத்தில் கிளைக் கழகத் துவக்க விழா தோழர் அரு. அப்பாவு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அப்பாவு, வ. கோவிந்தசாமி, உ. நடேசன், வ. அருணாசலம் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 41-வது வட்ட தி. மு. கழகம்

28—7—56-ல், தோழர் இராசமாணிக்கம் தலைமையில் கழகப் பணிமனையில் நடைபெற்றச் செயற்குழுக் கூட்டத்தில், கழகப் பொதுக்கூட்ட வரவு-செலவுகள் சரிபார்க்கப்பட்டது. சிறப்பான முறையில் கழக ஆண்டு விழா நடத்துவதெனவும், அதற்கான ஆக்க வேலையைக் கவனிக்க ஐவரடங்கிய குழு ஒன்று தேர்ந்தெடுத்தும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இராசிபுரத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

29—7—56 மாலை 7 மணிக்கு தோழர் இரா. தேசி தலைமையில், இராசிபுரம் புது சந்தைப்பேட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஜி. பி. சோமசுந்தரம், வேலவன் ஆகியோர் பேசிய பின்னர், தோழர் ஈ.வெ.கி. சம்பத் அவர்கள், ‘தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டுத் தீர்மானங்களும், இன்றைய அரசியல் நிலைமையும்’ எனும் பொருள் பற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். தமிழ்ப் புலவரேறு வரதநஞ்சையா அவர்கள் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்தும், இலங்கை சர்க்காரின் போக்கைக் கண்டித்தும், தமிழ்மொழியையும் இலங்கை ஆட்சி மொழியாக்குமாறு கேட்டுக்கொண்டும், இந்திய சர்க்கார் எதேச்சாதிகாரமாய் கைத்தறிக்கு எதிராக விசைத் தறிகளைப் புகுத்த முற்படுவதைக் கண்டித்தும், மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தொட்டாம்பாளையம் தி. மு. கழகம்

31—7—56 இரவு 8 மணியளவில், தோழர் எஸ். ரங்கசாமி இல்லத்தில் தோழர் ஆர் சுந்திரம் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், ஆகஸ்டுக் கடைசி வாரத்தில் தி. மு. கழக மூன்றாம் ஆண்டு விழா நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

அகரக்கொந்தகை தி. மு. கழகத் துவக்க விழா

30—7—56 மாலை 6 மணிக்கு. மேற்படி கழகத் துவக்க விழாப் பொதுக் கூட்டம் தோழர் எஸ். சௌந்தரராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி. சின்னப்பா, கே. எஸ். சௌந்தரராசன், சி ஜம்பு, என். கிட்டப்பா ஆகியோர் தி. மு. கழக சமுதாய, பொருளாதார, அரசியல் கொள்கைகள் பற்றிப் பேசினர். கூட்டத் துவக்கத்தில் தோழர் என். கிட்டப்பா கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

பேரையூர் தி. மு. கழகம்

தோழர்கள் ஏ. அனீபா, ஆர் கே. காளிமுத்து, தி. தங்கவேலன், த. நாராயணசாமி ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், விளம்பர உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

சேவூர் (வ. ஆ) தி. மு. க. 6-ம் ஆண்டு நிறைவு விழா

28—7—56 மாலை 6 மணிக்கு, புதிய பாடசாலை வெளியில் தோழர் முல்லை-சத்தி தலைமையில் விழா நடைபெற்றது. தலைவர் அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைத்தார். தோழர் ஏ. எச். சி. கிருட்டிணசாமி விழாவைத் துவக்கிவைத்து சொற்பொழிவாற்றினார். பின்னர், தோழர்கள் அ. கருத்தோவியன், கே. சுப்பிரமணியம், சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இரவு கழகத் தோழர்களால் ‘இராமாயணம்’ நாடகம் நடத்தப்பட்டது.

பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழு

பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழுக் கூட்டம், 29—7—56 மாலை 6-30 மணியளவில், தோழர் எல். தியாகராசன் தலைமையில் தாராவி ‘திராவிடரகத்’தில் நடைபெற்றது. தோழர் த. மு பொற்கோ, முன் கூட்ட நிகழ்ச்சி, முக்கியக் கடிதப் போக்குவரத்துக்கள் ஆகியவைகளை வாசித்துக் காட்டினார். 1955 நவம்பர் திங்களிலிருந்து 1956 மே வரையுள்ள வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன; அலுவலக நன்கொடைப் புத்தகங்கள் பெற்றுச் சென்றோர் உரிய தொகையுடன் விரைவில் கொடுத்துதவுமாறு கேட்டுக்கொண்டும், மத்தியக் குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் அலுவலக நிதிக்கு ரூ. 5 வீதம் இத்திங்கள் 15-ம் தேதிக்குள்கட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், பம்பாய் தி. மு. கழகக் கிளைத் தேர்தலை 1956 ஆகஸ்டு 15-ம் நாளிலும், மத்தியக் குழுத் தேர்தலை 28-8-56-லும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

மறுப்பு

தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் தி. மு. கழகச் செயலாளர் தோழர் சிவ. கனகசுந்தரம் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார் :—

“1-8-56-ல் தி. க. பத்திரிகை ஒன்றில், நான் அண்ணாவைப் பற்றி ஏதோ எழுதியுள்ளதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

“அப்படி ஒரு கடிதத்தை நான் எழுதவில்லை; சில ‘விஷமி’கள் இப்படி ஒன்றை எழுதி வெளியிட்டிருக்கவேண்டும்; எனக்கும் அக்கடிதத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. நான் எழுதியதாக இப்படி ஒரு கடிதம் வெளியாகியது கண்டு நான் மிகவும் வருந்துகிறேன். இந்த அறிக்கை மூலம் எனக்கும் அந்தக் கடிதத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்பதைத் தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.”

‘அப்பளம்’ — ‘தங்க’மாக மாறிய விந்தை!

சென்னை — சௌகார்பேட்டை தபால் நிலையத்தில், ‘அப்பளம், வைக்கப்பட்டிருக்கும் மரப்பெட்டி’ என்று எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் வந்த ஒரு பெட்டியை சந்தேகத்தின்மீது உடைத்துப் பார்த்ததில், அப்பெட்டியின் அடியில் சுமார் 90 தோலா எடையுள்ள தங்கம் இருந்தது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

இதையொட்டி போலீசார் சத்திய நாராயண மிஸ்ரா என்பவரையும் மற்றொருவரையும் கைதுசெய்து காவலில் வைத்துப் பின்னர் சுங்கவரி அதிகாரிகளிடம் ஒப்படைத்திருக்கின்றனர்.

இந்த இருவரும் பிகானீரைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆனால் சென்னையிலேயேதான் தங்கியிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

தோழர்களிடம் திட்டம் கேட்கிருர் அண்ணு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

றும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"தேர்தலில் நிற்பதற்கு நமக்கு நல்ல அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன.

"முதலாவதாக, தி. மு. கழகம் மட்டும்தான் திராவிட நாட்டிற்கே சொந்தமான கட்சி; இதர கட்சிகள்—காங்கிரஸ், கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு, பிரஜா-சோஷலிஸ்டு, இந்து மகாசபை போன்ற கட்சிகள் எல்லாம் இந்தியா பூராவுக்குமான கட்சிகளாகும்.

"திராவிட முன்னேற்றக் கழகம் செய்யக்கூடிய நன்மைகளும் தீமைகளும் இந்த நாட்டு மக்களை நேரடியாகப் பாதிக்கக்கூடியனவாகும்; கழகம் தவறுகள் இழைத்தால், மக்கள் அவற்றைத் திருத்துவதற்கு உரிமையும் வாய்ப்பும் உடையவர்களாயிருக்கின்றனர்; இதர கட்சிகளை சுலபத்தில் மக்கள் அப்படிச் செய்துவிட முடியாது. மக்கள் பார்த்துத் திருத்தக்கூடிய வகையில், இந்த நாட்டுக்கு மட்டுமே உரியதாகத் தி. மு. கழகம் இருக்கிறது.

"கழகத்தின் திட்டங்கள் தீட்டப்படுவது இங்கு! கொள்கைகள் வரையறுக்கப்படுவது இங்கு! ஆனால், வேறு எந்தக் கட்சிக்கும் இந்த நிலை கிடையாது.

"இரண்டாவதாக, வேறு கட்சிக்காரர்களின் கடந்த எட்டாண்டு காலக் கணக்குகளை நாம் மக்களிடம் காட்டவிருக்கிறோம்; மக்களும், அந்தக் கட்சிக்காரர்களிடம் அவர்களின் கடந்த காலக் கணக்குகளைக் காட்டுமாறு கேட்கவிருக்கின்றனர்.

"ஜனநாயகத்திற்குப் பெருந்துரோகமிழைத்துவிட்டுத்தான், காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது; சென்ற பொதுத் தேர்தலில் இந்த நாட்டில் காங்கிரஸைவிட காங்கிரஸை எதிர்த்தவர்களுக்குத்தான் அதிகமான வாக்குகள் கிடைத்தன; ஆனால் காங்கிரசல்லாதாரிடையே நிலவிய ஒற்றுமையின்மை, காங்கிரசிற்குப் பலம் தேடித்தந்தது. அது தவிர, பணபலத்தால் மட்டுமே காங்கிரஸ் ஆட்சி பீடமேறிவிடவில்லை என்பதை காங்கிரசார் மறந்துவிடக் கூடாது.

"சென்ற தேர்தலில் இராஜபாளையத்தில் குமாரசாமி இராஜா, ஆந்திராவில் கோபால ரெட்டி, செங்கற்பட்டில் பக்தவத்சலம், மாயவரத்தில் சந்தானம் ஆகிய இவர்கள் எல்லாம் தோற்கடிக்கப்பட்டார்களே, ஏன்?

"இராஜபாளையத்தில் முதன் மந்திரியான குமாரசாமி இராஜா தோற்றது ஏன்? இத்தனைக்கும், கட்டுப்பாடு மிகுந்த 'இராசுக்கள் என்ற வகுப்பாரே முழுக்கமுழுக்க வசிக்கும் தொகுதிதான் அது! குமாரசாமி இராஜா ஏதேனும் கெட்டவரா? பிறரை வாய் திறந்து வந்தபடி எல்லாம் பேசுபவரா என்றால், நிச்சயம் இல்லை; நல்லவர் தான்; பின் ஏன் தோற்ருர்?

"குமாரசாமி இராசா நல்லவர் தான்; ஆனால், அவர் சார்ந்துள்ள காங்கிரஸ் கெட்டுவிட்டதே! கெட்டுப்போன காங்கிரசில் இந்த நல்லவருக்கு என்ன வேலை?' என்று கூறித்தான் மக்கள் அவரைத் தேர்தலில் தோற்கடித்தனர்.

"இதை எல்லாம் மனதில் கொண்டால், காங்கிரஸ்காரர்கள் பணபலத்தால் மட்டுமே தாங்கள் வென்றுவிடலாம் என்று நினைப்பது தவறு என்பது புரியும்.

"அப்படியே காங்கிரசின் பணபலத்தால் 'நாம் முறியடிக்கப் பட்டுவிடுவதாக வைத்துக்கொள்வோம்; அதனால் நாம் துவண்டு விழ்ந்தா விடுவோம்? வாழ்நாளையே மக்களிடத்தில் ஒப்படைத்து விட்ட நாம், தேர்தலில் தோல்வி என்பதினாலேயே மக்களிடமிருந்து விலகியா போய்விடுவோம்? மீண்டும் மக்களிடத்தில் வந்து சொல்லுவோம் — 'எவ்வளவோ எடுத்துச் சொன்னோம்; கேட்கவில்லை' என்று கூறிவிட்டுத் தொடர்ந்து எடுத்துச் சொல்லிக் கொண்டே இருப்போம்.

"தென் அமெரிக்க நாடு ஒன்றில் ஜோரேஸ் என்றொரு விடுதலை வீரன் இருந்தான்; ஸ்பானிஷ் நாட்டுக்காரர்கள் தன் நாட்டை அடிமைகொண்டு, பலமான இரும்புப் பிடியின்கீழ் சிக்கவைத்திருக்கின்றனர் என்பதை அவன் உணர்ந்து, தன் நாட்டிற்கு விடுதலை பெறவேண்டுமென எண்ணுகிருன்; ஆனால், அவனை ஸ்பானிஷ் இராணுவத்தினர் பல முறை தோற்கடித்துவிடுகின்றனர்.

"மிகவும் மனவேதனையோடு ஜோரேஸ் தனது கோச்சு வண்டியில் ஏறிக்கொண்டு வேறொரு ஊர் நோக்கிச் செல்லுகிருன். அந்தக் கோச்சுவண்டியில்தான், தனது நாட்டு விடுதலைக்கான தஸ்தாவேசுகளையெல்லாம் அவன் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டிருந்தானும்.

"வேறு ஊர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது ஜோரேஸ், மலையடிவாரத்தில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவன் ஒருவனைக் காண்கின்றுன்; அந்தச் சிறுவன் ஆடு மேய்த்துக்கொண்டிருக்கும் போது, ஓநாய் ஒன்று வந்துவிடுகிறது. ஆட்டிடைப் புகுந்த ஓநாயை சிறுவன் தந்திரமாகக் கொல்லுகிருன். ஓநாய் வரும் போது ஆடுகளை வேறு திசைக்கு ஓட்டுவான்; ஆடுகள் ஓடும்போது அவற்றைத் துரத்திச் செல்லும் ஓநாய்மீது கல்லெடுத்து அடிப்பான்; ஆட்டுக் கூட்டத்தை ஓநாய் நெருங்கியதும் வேறு திசையில் அவற்றை ஓட்டிவிட்டு, ஓநாயை அடிப்பான்; இப்படி ஓடி ஓடி, ஓநாய் தன் சக்தியை இழந்து களைத்துப் போய், கண் விழி பிதுங்க நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டிருக்கும்போது பெரிய கல்லைத் தூக்கிப்போட்டு ஓநாயைச் சாகடிக்கிருன்.

"சிறுவன் ஓநாயைக் கொன்ற இந்தத் தந்திரமான முறையைக் கண்ட ஜோரேஸ், புதிய உற்சாகம் பெறுகிருன்; 'ஸ்பானிஷ் இராணுவத்தை எப்படித் தோற்கடிப்பது என்று கவலையோடு சுற்றிக்கொண்டிருந்தேன்; வழி தேடி அலைந்தேன்; பெரியதொரு அரசியல் தந்திரத்தை இந்தச் சிறுவனிடமிருந்து கற்றுக்கொண்டேன்' என்று கூவிவிட்டு, ஜோரேஸ், ஓநாயைக் கொல்ல சிறுவன் கையாண்ட முறைப்படி ஸ்பானிஷ் இராணுவத்தைத் தோற்கடித்து வெற்றி வாகை சூடினுன் என்பதைப் புத்தகத்தில் படித்தேன்; சில ஆண்டுகளுக்கு முன் படமாகவும் பார்த்தேன்; அதனை வாழ்நாளில் நடத்திக்காட்ட சந்தர்ப்பம் கிடைக்காதா என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

"எனவே, இந்தத் தேர்தலில் தோற்று விடுவதினுல் நமக்கு ஒன்றும் நஷ்டமில்லை.

"இந்தத் தேர்தலில், கழகத்தைப் பொறுத்து இதர முற்போக்குக் கட்சிகளுடன், ஏதாவது ஒருவகையான தோழமை—கூட்டு அல்ல—தோழமை கொள்ள முடியுமா என்பதையும் முயற்சித்துப் பார்க்க தேர்தல் குழுவிற்குப் பொதுச் செயலாளரிடம் அனுமதி கேட்டிருக்கிறேன்.

"தோழமை வேறு; கூட்டு வேறு. நமக்குக் கிடைக்காத உதவிகளை இதர முற்போக்குக் கட்சியினர் தருவதும், அவர்களுக்குக் கிடைக்காத உதவிகளை நாம் தருவதும் சாத்தியமானதுதானு என்பதை நாம் கண்டறியவிருக்கிறேம்.

'நாம் தேர்தலில் நிற்பது, நம்மிலே சிலருக்குச் சட்டசபையில் இடம் வேண்டும் என்பதற்காக அல்ல என்பதை நாம் மீண்டும் எடுத்துச் சொல்லவேண்டியவர்களாயிருக்கிறேம்.

'நம்மிலே சிலருக்கு சட்டசபையில் இடம் வேண்டும் என்பது தான் நமது நோக்கம் என்றால், காமராசர் தருவதற்குத் தயாராகவே இருக்கிருர்; விருதுநகர் நகரசபைத் தேர்தலில் தரவும் சம்மதித்தார்.

"நாம் கூறுவது, நம்மிலே சிலருக்கல்ல இடம்; நமது கழகத்திற்கு சட்டசபையில் இடம் வேண்டும் என்கிறேம்—50 பேரோ, 40 பேரோ—அது பற்றிக் கவலை இல்லை; நமது கழகம் சட்டசபையில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

"'ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக நான் பேசுகிறேன்' என்று கூறிடுகிருரே மார்தட்டி, தோழர் பி. டி. இராசன்—அவர் ஒருவர்தான் என்றாலும், 'நான் ஒரு கட்சியின் பிரதிநிதி' என்று மார்தட்டிக் கூறிட முடிகிறதே!

"அதுபோல, பலரல்ல—நம்மில் ஒருவர் சட்டசபையில் இருந்தாலும் போதும்; 'தோட்டம் மணக்கும்' என்பதுபோல, நம்மில் ஒருவர் சட்டசபையில் உட்காரும் இடத்தில் புரட்சி மணம் எழும்.

"மேலும், நம்மில் சிலர் சட்டசபையில் இருந்தால், தவறக்கூடிய சிலரும் தவறமாட்டார்கள்.

"நம்மில் பத்துபேர் இப்போதைய சட்டசபையில் இருந்திருந்தால், இராமசாமிப் படையாச்சியும் மாணிக்கவேலரும் தவறியிருப்பார்களா? இப்போது இருப்பவர்கள், இவர்கள் தவறும் போது தவறை எடுத்துக் காட்டிக் கண்டித்தவர்கள் அல்ல; 'உனக்கு அந்தச் சான்ஸ் கிடைக்கிறது. எனக்குக் கிடைக்கவில்லையே?' என ஏங்கியவர்கள் தான். நம்மில் சிலர் இராமசாமி படையாச்சி அந்தப் பக்கம் (மந்திரி சபைப்பக்கம்) பார்க்கும்போதே, 'அந்தப்பக்கமா?' என்று ஏறிட்டு விழித்திருந்தாலே, தவறு இழைக்கத் துணிந்திருக்க மாட்டார்களே!

"டில்லி மக்கள் சபையில் நம்முடைய கழகத்தவர் இருந்தால், அங்கே, 'நாம் யார்?' என்பதை உலகறியக் கூறமுடியும்!

"இந்த எண்ணத்தினாலேதான் நாம் தேர்தலில் ஈடுபடுகிறேமே தவிர, நம்மில் சிலர் சட்டசபையில் இடம் பெறவேண்டும் என்பதற்காக அல்ல!"

தொடர்ந்து பேசிய அண்ணு அவர்கள் காங்கிரசார் தேர்தலில் கையாளக்கூடிய பிரச்சாரம் அவர்கள் எதிர்பார்க்கிற பலன் தருவதாக இருக்கமுடியாதென்பதை விளக்கினர்கள்.

வரப்போகும் பொதுத் தேர்தலில் கழகத்திற்குச் சின்னம் ஒதுக்கித்தர பிரதம தேர்தல் அதிகாரி மறுத்துவிட்டதை விளக்கிவிட்டு, அண்ணு கூறியதாவது:—

"உதய சூரியன்—எழு ஞாயிறு—நமக்குச் சின்னமாகத் தரப்படவேண்டும் என்று நாம் கேட்டிருந்தோம்; இந்தச் சின்னத்தை ஆங்காங்கே போட்டியிடுகிற நமது தோழர்கள் தேர்தல் அதிகாரிகளிடம் கோருவர்; 'ஏறத்தாழ பெரும்பான்மையினருக்கு இந்தச் சின்னமே கிடைக்க வாய்ப்பு உண்டு' என்று கூறியிருக்கிருர்கள்; எனவே, இளங்கோவடிகள் கூறியதுபோல, 'ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!!' என்று கூறி, எழு ஞாயிறு வெற்றி பெறத்தக்க வகையில் தோழர்கள் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

வடாற்காடு மாவட்ட தி. மு. கழகக் கூட்டம்

"12-8-56 மாலை 2 மணிக்கு, வாணியம்பாடியில், தோழர் முல்லை-வடிவேல் அவர்கள் இல்லத்தில், வடாற்காடு மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் மாநில மாநாட்டின் தீர்மானங்களைப் பற்றியும் பொதுத் தேர்தலைப் பற்றியும் ஆலோசிக்கப்படும். உறுப்பினர்கள் தவறாது வருகைதர வேண்டுகிறேன்,"

என்று, வடாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் முல்லை-சத்தி அறிவிக்கிருர்.

தஞ்சை மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

"12—8—56 காலை 9-30 மணிக்கு, தஞ்சாவூர் பூக்காரத் தெரு நாடார் தோட்டத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் நடைபெறும். அவ்வமயம், பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட இருப்பதால் மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் வந்திருந்து ஆய்வுரைகள் வழங்கி கூட்டத்தைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்,"

என்று, தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் அறிவிக்கிருர்.

தென்னுற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

12-8-56 காலை 10 மணிக்கு, கடலூர் (என். டி.) 'ஒட்டல் பிருந்தாவன'த்தில், தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, (1) எனது விலகல் கடிதத்தை அங்கீகரித்தல்; (2) புது மாவட்டச் செயலாளர் தேர்தல்; (3) புதுச்செயலாளரால் கொண்டு வரப்படும் தீர்மானங்கள் ஆகியவை குறித்து முடிவு செய்யவிருப்பதால், உறுப்பினர்கள் தவருது வருகை தர வேண்டுகிறேன். குறிப்பு:— தேர்தலை நடத்தி வைக்க துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் வருகிருர்."

என்று, தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் இரா சாம்பசிவம் அவர்கள் அறிவிக்கிருர்.

கழகக் கூட்டம்

★

ஆவணத்தான்கோட்டை:
அண்ணு திடலில்
(சந்தைப்பேட்டைக்கு அருகில்)
9—8—56 மாலை 6-30 மணிக்கு
தலைவர்:
நா. மாரிமுத்து
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

★

கடையநல்லூர்:
மறுமலர்ச்சி திடலில்
9—8—56 இரவு 7 மணிக்கு
பேசுபவர்:
ஈ. வெ. கி. சம்பத்

அண்ணு

சுற்றுப்பயணம்

ஆக. 11: வலங்கைமான்
12: தேவகோட்டை
19: காலை-பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20: காலை-சேலம்
மாலை-குளத்தூர்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஆக. 9: ஆவணத்தான் கோட்டை
10: அதிராம்பட்டினம்
11: ஆலங்கோட்டை
12: குடந்தை

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஆக. 12: கடலூர்
15: பண்ணைக்காடு
16: சிவகிரி
18: சின்னத்தம்பி பாளையம்
19: காலை-பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20: காலை-சேலம்

பாலாற்று நீர்த் தகராறு.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"இந்தப் பாலாறு விஷயமாக சென்னை ஏதேனும் கோரிக்கைகளை எழுப்பிற்று?" என்று கேட்கப்பட்டபோது, 'இல்லை' என்று கூறிய மந்திரி தொடர்ந்து குறிப்பிட்டதாவது:—

"சென்னை மாநிலத்தவர் கோரிக்கைகள் எழுப்பவில்லை; மைசூர் மாநிலத்தவர், 1892-ம் ஆண்டு ஒப்பந்தப்படி உபயோகித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டதைவிட அதிகமான தண்ணீரை உபயோகித்துக் கொள்வதாகத்தான் சென்னை புகார் கிளப்பியது; நான்கு சம்பவங்களை புகாருக்கு ஆதாரமாக சென்னை காட்டிற்று; இவற்றில் இரண்டு சம்பவங்களில் ஒப்பந்தம் மீறப்படவில்லை என்பது காணப்பட்டது; வேறு சம்பவங்கள் குறித்து, எல்லா விபரங்களும் கிடைக்கவில்லை."

ஆசியாவிலேயே முதல் அணு உலை

பம்பாய் — டிராம்பேயில் இயங்கத் துவங்கிவிட்டது!

சுமார் 50 எஞ்சினீயர்கள் விஞ்ஞானிகள் கூட்டு முயற்சியால் ஆசியாவிலேயே முதன்முதலாகப் பம்பாய்—டிராம்பேயில் நிர்மாணிக்கப்பட்ட இந்திய அணு உலை இயங்கத் துவங்கிவிட்டது.

'நீச்சல் குளம் மாதிரி'யில் அமைக்கப்பட்டுள்ள இந்த அணு உலை—விவசாயம், கைத்தொழில், மருத்துவம் ஆகிய துறைகளில் ஆராய்ச்சிக்கு வேண்டிய கதிரியக்கப் பொருளை உற்பத்தி செய்யவும் ஆராய்ச்சிகள் நடத்தவும் பயன்படுத்தப்படும்.

போப்பரசர் அன்பளிப்பு

ஆமதாபாத், ஆக. 6—

அண்மையில் கட்ச் பிரதேசத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்திற்கு இலக்காகி சேதமுற்ற மக்களுக்கு உதவுவதற்காக போப்பரசர், 10,000 டாலர் (ரூ 47,600) அன்பளிப்புத் தந்திருக்கிருர் எனத் தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நாரியாயணை செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.